அம்பத்தூர்  மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்

O.S.No. 63/2007

இந்த நீதிமன்றத்து உதவியாளர் திருமதி. உ. தாரணி என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி/ பிரதிவாதி தரப்பின் சாட்சியின் வாக்குமூலம் 1873ம் ஆண்டின் 10வது சட்டத்தில் வகை முறைகளுக்கு உட்பட்டு 2026ம் ஆண்டு ஜுலை திங்கள் 02 ம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | |
|---|---|
| பி.சா.1 | 02.07.2026 |
| பெயர் ஏஞ்சல் யாழினி | தந்தை/ கணவர் பெயர் |
| தொழில் | வயது |
| இனம் | சமயம் |
| கிராமம் | வட்டம் |

<u>வாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>:-

1. யாரால் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் ஆழ்வார் வழக்கு தாக்கல் செய்துள்ளார். எதற்காக வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்றால் தாவா சொத்து வேண்டும் என்று கேட்டு தாக்கல் செய்துப்பட்டது. எனது நிருபணவாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும். நான் BE EC படித்துள்ளேன். தாவா சொத்து விவரம் தெரியும். திருமுல்லைவாயில் கிராமம் சர்வே எண் 304/1 விஸ்திரணம் 775 சதுர மீட்டர் ஆகும். தாவா சொத்தில் எவ்வாறு உரிமை கோருகிறேன் என்றால் 3ம் பிரதிவாதிக்கு செட்டில்மென்ட் மூலமாக கிடைத்த சொத்தினை அவர் சாந்தி என்பவருக்கு பவர் கொடுத்தார். மேற்கூறிய சாந்தி என்பவரிடம் இருந்து நான் கிரையம் பெற்றேன்.

2. நான் கிரையம் பெறும்போது JBM நிறுவனத்தில் HR ஆக வேலை செய்து வந்தேன். கிரைய தொகையை எவ்வாறு கொடுத்தேன் என்றால் ரொக்கமாக தான் கொடுத்தேன். எவ்வளவு கிரைய பணம் கொடுத்தேன் என்று சரியாக ஞாபகம் இல்லை. ரூ20,000 க்கு மேல் பணபரிவர்த்தனை செய்தால் அது வங்கி மூலமாகவோ அல்லது காசோலை மூலமாகவோ தான் செய்யவேண்டும் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியும். 3 ம் பிரதிவாதி தமிழ்செல்வன் மற்றும் சாந்தி ஆகியோர் எனக்கு உறவினர் என்றால் சரிதான். மற்ற பிரதிவாதிகளுக்கு எதிராகவும் வாதிகளுக்கு எதிராகவும் குற்றவழக்கு புகார் கொடுக்கப்பட்டது என்றால் எனக்கு தெரியாது. 3 ம் பிரதிவாதி எனது தந்தையின் உடன்பிறந்த சகோதரர் ஆவார்.

3. பி.சா.ஆ 1 அசையன்மென்ட் பட்டாவில் சொத்து விஸ்திரணம் 3 சென்ட் என்று காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். பி.சா.ஆ 2 கணினிபட்டாவில் சர்கார் புறம்போக்கில் கிணறு மட்டும் குறிப்பிட்டு உரிமையாளர் பெயர் குறிப்பு இல்லை என்றால் சரிதான். 1 ம் பிரதிவாதி எனது தந்தையின் தந்தை என்றால் சரிதான். பி.சா.ஆ 4 ரிலிஸ் பத்திரத்தில் 2013 வருடத்தில் எனது தாத்தா மற்றும் தந்தை லாரண்ஸ் சொத்தை எனது சித்தப்பா 3 ம் பிரதிவாதிக்கு ரிலிஸ் செய்துகொடுத்தார்கள் என்றால் சரிதான். எனது தந்தையுடன் பிறந்தவர்கள் 1 தம்பி , 4 தங்கைகள் ஆவார்கள். மேற்கூறிய 4 சகோதரிகள் யாரும் பி.சா.ஆ 4 ரிலிஸ் பத்திரத்தில் கையொப்பம் செய்யவில்லை என்றால் சரிதான்.

4. 1 ம் வாதி எனது பாட்டிஎன்றால் சரிதான். 1 ம் வாதி 1 முதல் 3 பிரதிவாதிகள் ஆன எனது தாத்தா, தந்தை, சித்தப்பா மீது 2007 வருடத்தில் வழக்கு தாக்கல் செய்தார் என்றால் தெரியாது. பி.சா.ஆ 5 பவர் பத்திரமானது நான் கிரையம்பெறுவதற்கு 1 நாள் முன்பு தான் ஏற்படுத்தப்பட்டது என்றால் சரிதான்.கிரைய தொகையை நான் சாந்தி என்பவரிடம் கொடுத்தேன்.

சாந்தி என்பவர் கிரைய தொகையை 3ம் பிரதிவாதியிடம் கொடுத்தாரா என்றால் எனக்கு தெரியாது. பி.சா.ஆ 7 திருத்தல் பத்திரம் எதற்காக ஏற்படுத்தப்பட்டது என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. பி.சா.ஆ 7ல் உள் ள கையெழுத்து என்னுடையது என்றால் சரிதான். நான் எந்த கிரையதொகையையும் கொடுத்து சொத்தை வாங்கவில்லை என்றால் சரியல்ல.

5. எனது பெயருக்கு பட்டா மாற்றப்படவில்லை என்றால் சரியல்ல. என்பெயரில் பட்டா உள்ளது. நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் கொடுத்துள்ளேன். அவ்வாறு பட்டா எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. வழக்கு சொத்து 1ம் வாதி மற்றும் அவர் வாரிசுகளுக்கு மட்டுமே சொந்தமானது என்றால் சொத்து 775 சதுரமீட்டர் சொத்து என்னுடையது ஆகும். வாதிகளின் சொத்தை அபகரிக்கும் நோக்கம் உள்ளது என்றால் சரியல்ல. என்பெயரில் போலியான ஆவணங்கள் ஏற்படுத்தி மற்ற பிரதிவாதிகளுக்கு நான் துணைபோகிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்து சம்மந்தமாக எத்தனை வழக்குகள் உள்ளது என்றால் இந்த நீதிமன்றத்தில் 3 வழக்குகள் உள்ளது. வழக்கு சொத்தில் வீடு உள்ளதா என்றால் இல்லை. மின்இணைப்பு உள்ளதா என்றால் இல்லை. நான் அங்கு வசிக்கிறேனா என்றால் இல்லை. சென்று பார்த்துவருவேன்.

6. தாவா சொத்து பட்டா சம்மந்தமாக வட்டாட்சியர் அலுவலகத்தில் விசாரணை நடந்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியும். எனக்கு தாவா சொத்தில் அனுபவம் இல்லை என்பதால் தான் பட்டா வழங்கப்படவில்லை என்றால் சரியல்ல. அ.வ.எண் 17/2007 என்ற வழக்கு 1 முதல் 3 பிரதிவாதிகள் தாக்கல் செய்து அது தள்ளுபடி ஆன விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. இந்த வழக்கில் இடைகால

தடைஉத்தரவு வாதிக்கு சாதகமாக வழங்கப்பட்டு அந்த உத்தரவு மீது 1 முதல் 3 பிரதிவாதிகள் மேல்முறையீடு செய்தமனு தள்ளுபடி ஆன விவரம் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. 1 முதல் 3 பிரதிவாதிகள் இந்த வழக்கு அவர்களுக்கு சாதகமாக இல்லை என்பதால் வழக்கு நிலுவையில் இருக்கும்போது என்னை கருவியாக பயன்படுத்தி நானும் அவர்களுடன் கையும்உரையுமாக இருந்து செயல்பட்டு வருகிறேன் என்றால்சரியல்ல.

7. வழக்கு சொத்து முழுவதும் 1ம் வாதியின் வாரிசுகள் அனுபவித்து வருகிறார்கள் என்றாலும் அதை தடுக்கும் உரிமை எனக்கு இல்லை என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் எனக்கு சாதகமாக இல்லை என்றால் சரியல்ல.

இத்துடன் குறுக்கு விசாரணை முடித்துக்கொள்ளப்படுகிறது, மறு விசாரணை இல்லை.